[19th March 1958

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : காடுகளிலிருந்து வெகு தூரத்திலிருக்கும் விவசாயிகள் அவர்களுக்கு வேண்டிய பசுந்தழை உரத்தை அவர்களே உற்பத்தி செய்துகொள்ளலாம்.

**Sri R. SWAMINATHA MERKONDAR** : தஞ்சாவூர் ஜில்லா ஒரு விவசாயப்பொருள் உற்பத்தி செய்யும் ஜில்லாவாக இருப்பதால், அந்த ஜில்லாவிலுள்ள புறம்போக்கு நிலங்களில் பசுந்தழைக் காடுகள் உற்பத்தி செய்யப்படுமா ?

**The Hon. Sri M. BHAKTAVTASALAM** : அந்த ஜில்லாவில் ஆற்றோரங்களில் தேக்கு பயிரிடப்பட்டுவருகிறது. ஆனால் பசுந் தழைகள் அளிக்கக்கூடிய காடுகளை உண்டாக்குவது அவ்வளவு சுலபமல்ல. நான் முன்புசொன்னதுபோல், தஞ்சாவூர் ஜில்லாவில், விவசாயிகள் அவர்களுக்கு வேண்டிய பசுந்தழை உரத்தை அவர்களே உற்பத்திசெய்துகொள்ள முன் வரவேண்டும். அதற்கு வேண்டிய வசதியை அரசாங்கம் செய்து கொடுக்கிறது.

*Magnesite Syndicate, Salem.*

* 372 *Q.*—**Sri M. KALYANASUNDARAM** : Will the Hon. the Minister for Industries, be pleased to state whether the Government have taken any decision in regard to the taking over of the magnesite mines now leased out to the Magnesite Syndicate, Limited, Salem, when the term of lease expires?

**The Hon. Sri R. VENKATARAMAN** : The answer is in the negative, Sir.

**Sri M. KALYANASUNDARAM** : இந்தச் சுரங்கங்களை எடுத்து நடத்துவதற்கு நம் ராஜ்யத்திலிருந்து வேறு யாரும் மனுச் செய்திருக்கிறார்களா ? அப்படிச் செய்திருந்தால் அதை சர்க்கார் பரிசீலித்திருக்கிறார்களா ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : கனிப் பொருளை மாத்திரம் எடுப்பதற்கு, தங்களுக்கு லைசென்ஸ் கொடுக்க வேண்டுமென்று சென்னை ராஜ்யத்திலிருந்து மற்றொரு கம்பெனியார் கேட்டுக்கொண்டார்கள். ஆனால், இப்போது கொடுக்கப்பட்டிருக்கும் லைசென்ஸை 1959-ம்௵ ஜனவரிமீ 10உ-வரையிலும் நீடிக்குமாதலால் அவர்களுக்கு அனுமதி கொடுப்பதுபற்றி கவனிக்கப்படவில்லை.

**Sri M. KALYANASUNDARAM** : இப்பொழுது நடத்திவரக் கூடிய கம்பெனிக்கு 1959-ம் ஆண்டு ஜனவரி மாதத்தோடு இந்த அனுமதி முடியக்கூடிய காலத்தில் அது ரத்து செய்யப்படுமா ? அல்லது தொடர்ந்து நீடிக்கப்படுமா ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : ரத்து செய்யப்படும்.

**Sri V. K. KOTHANDARAMAN** : மைனிங் . ஆக்டுக்கு விரோதமாக இப்பொழுது மாக்னசைட் எடுக்கப்படுகிறது, அப்படி எடுக்கும்போது ஆழமாகப் போகவேண்டியிருக்கிறது. இதனால் செலவு அதிகமாகிறது என்ற காரணத்தினால், புதிய புதிய சுரங்கங்கள் வெகு தூரத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்று சர்க்காருக்குத் தெரியுமா ? அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது எனக்குப் புரியவில்லை. புதிய புதிய சுரங்கங்களைக் கண்டுபிடித்து, அதிகமான மாக்னசைட் தோண்டியெடுத்தால், நமக்கு அதிகமான லாபம் வரும்.

**Sri M. KALYANASUNDARAM** : மந்திரி அவர்கள் விவரத்தைக் கொஞ்சம் புரிந்துகொள்ளாமல் பேசுகிறார் என்று நினைக்கிறேன். சுரங்கங்களின் மேலே இருக்கும் மாக்னசைட்டை எடுத்துக்கொண்டு போகிறவர்கள் மலிவாக எடுத்துக்கொண்டு போய்விடுகிறார்கள். அவர்கள் சுலப

19th March 1958]

மாக எடுத்துக்கொண்டுபோன பிற்பாடு, சர்க்கார் எடுத்துக்கொண்டு நடத்த முடியாது. அவர்கள் தோண்டிவிட்டுப்போன இடங்களை சர்க்கார் எடுத்துக் கொண்டால், வெகு ஆழத்தில்போய்த்தான் தோண்டி எடுக்கவேண்டி யிருக்கும். அதனால், சர்க்காருக்கு அதிகமாக உற்பத்திச் செலவு ஏற்படுவ தோடு நஷ்டமும் ஏற்படும். ஆகவே, மைனிங் விதிகளுக்கு மீறிய காரியத்தைத் தடை செய்தோ, மீறுவதாகத் தெரிந்தால் அவர்களுடைய குத்தகையை ரத்து செய்தோ நோட்டீஸ் அனுப்ப முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : சட்டத்திற்கு உட்பட்டு லைசன்சு பெறுகிறவர்களுக்கு கனிப் பொருளை எடுப்பதற்கு உரிமை உண்டு. அவர்கள் அதிகமாக எடுத்துக்கொண்டு விடுகிறார்கள் என்றால், அதைத் தடுப்பது முறையல்ல. ஆனால், மைனிங் விதிகளுக்கு விரோதமாகச் செய் தால், சர்க்கார் அதைக் கவனிக்கும். அம்மாதிரி புகார் வந்தது. மைனிங் விதிகளுக்கு மாறாக ஏதும் நடத்தப்படவில்லை என்பதுதான் சர்க்காருடைய அபிப்பிராயம்.

SRI K. VINAYAKAM : Sir, what are the reasons for the contemplated cancellation of licences that are granted to this company? Did the company violate any of the conditions under which mine has got to be worked? Have Government any other agency?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, under the Mining Rules, a licence is granted for 30 years and then they have the option of renewal for another 30 years; in this case the 60-year period has expired. Therefore, the Government are free to examine the question whether this should be continued or whether it should be taken up by Government or any other alternative arrangement should be made to the best advantage of the State.

SRI M. KALYANASUNDARAM : இப்பொழுது நடத்திவரும் அன்னியக் கம்பெனிக்கு இனி தொடர்ந்து லைசென்சு கொடுக்க படமாட்டாது என்று அமைச்சர் அவர்கள் உறுதியாகக் கூறியதை நான் வரவேற்கிறேன். சர்க்காரே எடுத்து நடத்தும் யோசனை இப்பொழுது எந்த மட்டில் இருக்கிறது ? சர்க்காரே எடுத்து நடத்த முன் வருவார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : சர்க்கார் எடுத்து நடத்துவதானால், இதற்குச் சுமார் 18 லட்ச ரூபாய் மூலதனம் போட வேண்டும். அதில் நமக்கு நிகர வருமானம் இரண்டரை லட்ச ரூபாய் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சர்க்காரே எடுத்து நடத்துவதானால் குறிப்பிட்ட மூன்று பொருள்கள்தான் செய்ய முடியும். தனியார் யாராவது முன்வந்து பெரிய 'ரிப்ராக்டரி' தொழிற்சாலை வைப்பதாயிருந்தால், நமது ராஜ்யத்தில் உள்ளவர்களுக்கு வேலை வசதிகள் அதிகரிக்கும் என்ற காரணத்திற்காக அவர்களுக்கு அனுமதி கொடுப்பதினால் நம்முடைய ராஜ்யத்திற்கு நன்மை ஏற்படுமா என்று சர்க்கார் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

*Radio sets*

*373 *Q*.—SRI M. D. THIAGARAJA PILLAI : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the number of community radio sets assembled by the State Broadcasting Department during the years 1950–57;

(*b*) whether the department has now stopped this work of assembling and, if so, the reasons therefor; and

(*c*) the total revenue earned and the total amount spent by the department during 1950–57?

THE HON. SRI P. KAKKAN : (*a*) 2,615 sets.